---


தாயுமானவருடன் வாழ்வோம்
சேரன்மானதேவி பரத்வாஜ ஆசிரமத்தில், 16.10.19 அன்று, இணையதளத்தில் - இப்புத்தகத்தை, சுவாமி அகிலானந்தா வெளியிட்டார்கள். அருகில் ஆசிரியர் மன்னார்குடி பானுகுமார்.
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவருடன் வாழ்வோம்

தாயுமானவர் போல் -ஒரு மகாபுருஷருடன் வாழ்வதற்கு- நமக்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று- தோன்றலாம்.

உண்மைதான். ஆனால் -இங்கு -ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும்.

அவதார புருஷர்கள்- மரணத்தை வென்றவர்கள். அதாவது, என்றும் வாழ்பவர்கள். தகுதியை- வளர்த்துக் கொண்டோமானால் --எப்பொழுது வேண்டுமானாலும் –அவர்களுடன்-- நாம் வாழ முடியும். காலம்— அதற்குஒரு தடையாக இருக்க முடியாது.

தாயுமானவர் மறைந்தபோது-- கலங்கி நின்ற ஒருவரிடம் --தாயுமானவரின் சீடர் அருளயர் சொன்னார்.

"மகனே, ஏன் கலங்ககிறாய்? தாயுமானவர் இதுவரை ஓர் உடம்பில் மட்டுமே- வாழ்ந்தார். இப்போது -எங்கும் நிறைந்து விட்டார். இனி -நீங்கள் --தாயுமானவரை காண எங்கும் போக வேண்டாம். இருந்த இடத்தில் - இருந்தபடியே, உள்ளம் உருகி அழைத்தால் -- அவர் --உங்கள் முன் வாருவார் " என்று சொன்னார்.

அதுபோலவே-- இராமலிங்க வள்ளலார் மறைந்த பின்னர்-- அவரது சீடர். "காட்சியளிப்பதற்காக வள்ளலார் மீண்டும் வருவார்....நுண்ணுடலில் அவர் எப்போதும் வாழ்கிறார்! நமக்கு அருகில், மிக அருகில் வருவார். இப்போது-- நம் அருகில் --மிக அருகில் --உலவிக் கொண்டிருக்கிறார்." என்று கூறினார்.

காலத்தை வென்ற --கவிஞர் பாரதியார்-- தாயுமானவரைப் பற்றி பாடுகிறர்.

"என்றும் இருக்க உளம்கொண்டாய்

--இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்

இன்றும் இருத்தல் செய்கின்றாய்

---

இறவாய் தமிழோடு இருப்பாய் நீ!

'ஒன்று பொருள்; அஃது இன்பம்'

என உணர்ந்தாய்—தாயுமானவனே

நின்ற பரத்து மாத்திரமோ

நில்லா இகத்தும் நிற்பாய் நீ!"

பாரதியார் சொன்னதைப் போல்-- தாயுமானவர் என்ற அந்த மாமனிதர்- இப்போது இல்லை.

இறவாய் தமிழோடு இருக்கிறார்- தாயுமானவர். நில்லா இகத்தும்-- வாழ்ந்து கொண்ருக்கிறார் -தாயுமானவர்.

அவரது ஆன்மா- வள்ளலாராக உருவெடுத்தது. பின்பு வேதாத்திரியாராக உபதேசித்தது. தாயுமானவர்-- தான் அவதாரம் எடுத்த இலட்சியத்தை வென்று காட்டினார்.

ஆகையால்-- தாயுமானவரின் ஆன்மா வேறறு எங்கும் போய்விடவில்லை.

மொத்த மனித குல வாழக்கையின் வழியாகப்—தாயுமானவரின் ஆன்மா பயணம் செய்து-- மனித குலத்தின் நாடி நரம்புகளில்-- சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது. "அதாவது, தாயுமானவர் இன்றும் வாழ்கிறார்.

இவற்றிலிருந்து- நாம் அறியும் உண்மை என்ன? அவதார புருஷர்களுக்கு மரணம் இலலை. நாம் நம்மைத் தயார்படுத்திக்கொண்டோமானால் நம்மால் அவர்களுடன் வாழ் முடியும்.

தாயுமானவருடன் வாழ்வோம். தாயுமானவர் தந்த-- சிந்தனையை ஏற்போம். தாயுமானவர் வழியில் --செல்வோம். தொண்டாற்றி ஆனந்தமடைவோம்! ஆனந்தம் –ஆனந்தம்- ஆனந்தமே!! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!!